அலை அடிக்கிற கடலிலே
புலி அடிக்கிற ஜலசா ஏலேலோ ஜலசா
இடி இடிக்கிற கடலிலே
புலி வெடிக்குது ஜலசா ஏலேலோ ஜலசா

கடல் அல்ல கடல் அல்ல கடல் அல்ல
இது தமிழீழ தாயோட தன்மானம் காக்கின்ற
கண்ணீரின் முந்தாணை
முந்தாணை ஏலேலோ முந்தாணை
தண்ணீரின் முந்தானை ஏலேலோ முந்தாணை
அது கிழியாமல் காக்கத்தான் துணிவொடு புறப்பட்டோம் அலையலையா புலிச்சேனை
புலிச்சேனை ஜலசா புலிச்சேனை 2

இனி என்ன இனி என்ன 2
எம் கடல் வாழும் மீன்கூட துணிவோடு புலியாகி போராடும் கட்டாயம்
கட்டாயம் ஏலேலோ கட்டாயம் போராடும் கட்டாயம் ஏலேலோ கட்டாயம்
கரும் புலியாகி தாக்கத்தான் வருகின்ற பகையெல்லாம் கிளியோடு விட்டோடும்
விட்டோடும் ஜலசா விட்டோடும் 2

ஒருபோதும் மறுபோதும் 2
எம் அலைபாயும் கடலெங்கும் பகையோடும் பேயாட்டம் துளிகூட நடக்காது
நடக்காது ஏலேலோ நடக்காது 2
அவன் திமிரோடு துணிந்திங்கே வந்தாலும் ஊருக்கு உடல் கூட திரும்பாது
திரும்பாது ஜலசா திரும்பாது 2

அலை அடிக்கிற கடலிலே
புலி அடிக்கிற ஜலசா ஏலேலோ ஜலசா
இடி இடிக்கிற கடலிலே
புலி வெடிக்குது ஜலசா ஏலேலோ ஜலசா